# தமிழருக்கு நீதி வழங்குமாறு பௌத்த குருமார் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நடைபெறும் அர்த்த மற்ற யுத்தத்தை நிறுத்தி தமிழ மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்குமாறு தெற்கிலுள்ள பல பௌத்த குருமார்கள் அரசை வலியுறுத்திவருகின்றனர்.

இத்தகவலை அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு ஆயர்கென்னத்பெர்ணண்டோ தெரிவித்துள்ளார். யாழ் பரியோவான் கல்லூரியில் நேற்று நடைபெற்ற வைபவமொன்றிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கு நாங்கள் எதிரிகளல்ல என்பதனை யாழ் நகர் செல்லும் நீங்கள் தமிழ் மக்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள் என்று பௌத்த குருமார்கள் என்னிடம் நேரில் வந்து தெரிவித்தார்கள் என்றும் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

அடுத்த தடவை நான்...

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 27 இதழ் 335
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 11 — 01 — 1993

## கூட்டுப்படைத் தலைமையலுவலகம் அநுராதபுரத்திற்கு மாற்றப்படும்

(கொழும்பு)
கொழும்பில் இதுவரை இயங்கி வந்த ஸ்ரீலங்கா கூட்டுப்படை தலைமை அலுவலகம் விரைவில் அநுராதபுரத்திற்கு மாற்றப்படவுள்ளதாக அரசாங்க தலைமைப்பீடம் தெரிவித்துள்ளது.

கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் இவ்வாறு அநுராதபுரத்திற்கு மாற்றப்படுவதன் மூலம் விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தினை பின்னடைவு அடைந்திருக்கும் இராணுவத்தினருக்கு புதிய தெம்பூட்டலாமென பாதுகாப்புத்துறை கருது...

(4 ம் பக்கம் பார்க்க)

# தலைவர் பிரபா - அங்கிலிக்கன் ஆயர்

# நேற்று இரவு யாழ். நகரில் சந்திப்பு

### அரசு சமாதானத்தை விரும்பினால் பூநகரிப்பாதையைத் திறக்கவேண்டும் — புலிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனும் அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு ஆயர் வணக்கத்திற்குரிய கென்னத் பெர்ணண்டோவும் நேற்றிரவு யாழ். நகரில் சந்தித்து தமிழர்களின் தற்போதைய நிலவரம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினர்கள்.

இச்சந்திப்பின்போது அரசு சமாதானத்தை விரும்பினால் பூநகரிப்பாதையை திறக்க வேண்டுமென்று விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் கென்னத் பெர்ணண்டோவுக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுக்குமிடையில் நேற்றிரவு 7-00 மணி முதல் 9-30 மணி வரை இச்சந்திப்பு இடம் பெற்றது.

இச்சந்திப்பின் போது விமானத்தாக்குதல், மற்றும் பொரு...

(4-ம் பக்கம் பார்க்க)



நேற்றிரவு இடம்பெற்ற சந்திப்பின்போது தலைவர் பிரபாகரன், அங்கிலிக்கன் ஆயர் வண. கென்னத் பெரணண்டோ. வண. தோமஸ் சௌந்தரநாயகம், வண. பி. ஜே. அம்பலவாணர் ஆகியோர் எடுத்துக்கொண்ட படம்.

## யாழ். நகரில் இன்று அரசுக்குஎதிராக மாபெரும் ஆர்ப்பாட்டபேரணி

(யாழ்ப்பாணம்)
ஸ்ரீ லங்கா அரசு திட்டமிட்டு மேற்கொள்ளும் பொருளாதாரத் தடை உட்பட நான்கு அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று இன்று காலை 10 மணிக்கு நல்லூர் கந்தசாமி கோவில் முன்றலில் இருந்து ஆரம்பமாகிறது.

இந்தப் பேரணியில் அறுபதுக்கும் மேற்பட்ட அமைப்புக்கள் கலந்து கொள்ளவிருக்கின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாப் பகுதியில் சீ-பிளேன் நோட்டம்

(யாழ்ப்பாணம்)
தென்மராட்சி மற்றும் யாழ்குடாவின் பல பகுதிகளை சுற்றி நேற்றுக் காலையில் சீபிளேன் நோட்டமிட்டது.

சாவகச்சேரி, மட்டுவில், நுணாவில் பகுதிகளை குறியாக வைத்து நேற்றுக்காலை 8-00 மணியளவில் சீ-பிளேன் பல தடவை சுற்றி வட்டமிட்டு நோட்டமிட்டது.

சீபிளேனின் நோட்டத்தை அடுத்து மேற்குறிப்பிட்ட பகுதிகளில் வசித்த மக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்தனர்.

சாவகச்சேரி சந்தைப் பகுதிகளில் நின்ற பொதுமக்கள் அனைவரும் பீதியடைந்த நிலையில் பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓட்டமெடுத்தனர்.

சோண்டாவில், நல்லூர், கொக்குவில், மானிப்பாய், சுதுமலை, கோப்பாய், அரியாலைப் பகுதிகளிலும் நேற்று சீ-பிளேன் வட்டமிட்டு நோட்டமிட்டது. [155,59. 56]

## "சர்வதேச சமூகம் போராடும் மக்களுக்கு நீதி வழங்கட்டும்"

### வெகுஜன அமைப்பு அறிக்கை

(யாழ்ப்பாணம்)
"எமது மக்கள்பேரினவாத கொடுமைகளுக்கு முகம் கொடுக்க திடசங்கற்பம் பூண்டுள்ளதுடன் அதற்கே உரித்தான போராட்ட வடிவங்களை ஏற்கவும் தயாரரகவுவ ளனர் என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளட்டும். அடக்கு முறைக்கு எதிராக போராடும் மக்களுக்கு சர்வதேச சமூகம் நீதிவழங்கட்டும்"

இவ்வாறு தமிழீழ வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் இன்று நடைபெறும் வெகுஜனப் போர் தொடர்பாக வெளியிட்டுள்ள

(4-ம் பக்கம் பார்க்க)

## தொழில் பதிவுச் சான்றிதழ் வழங்கப்படும் நாட்கள்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தமது வாணிபம் தொழில் முயற்சிகளைப் பதிவு செய்ய விண்ணப்பித்தவர்கள் வாணிபம் தொழில் பதிவுச் சான்றிதழ்களை கீழ்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஊர்வலஒழுங்குகள்

(யாழ்ப்பாணம்)
தமிழீழ வெகுஜன அமைப்புகள் நடத்தும் ஆர்ப்பாட்டப் பேரணி கீழ்வரும் ஒழுங்கின்படி நகர்ந்து செல்லும். ஊர்வலத்தினர் முன் பதாகையை முன்னெடுத்துச் செல்ல அத

(4-ம்பக்கம் பார்க்க)

## வாரத்தில் இரு நாட்கள் மீட்பு நிதி சேகரிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)
ஒவ்வொரு புதன்கிழமையிலும் ஞாயிற்றுக்கிழமையிலும் நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

புதன்கிழமை - பி. ப. 3-00 தொடக்கம் 3. 30 மணி வரையும், ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9-30 முதல் 10-00 மணி வரையும் மீட்பு நிதி சேகரிக்கப்படும். இதுவரை மீட்பு நிதி செலுத்தத்தவறியோர் இக்குறித்த நாட்களில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்தலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## வவுனியாவில் புலிகள் ராணுவம் கடும் மோதல்

(வவுனியா)
வவுனியா சின்னக்குளம் சந்திப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்குமிடையில் நேற்று முன் தினம் காலை சுமார் இருமணி நேரம் கடும் மோதல் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

காலை 6-30 மணிமுதல் 8-30 மணிவரை துப்பாக்கிவேட்டுச் சத்தங்களும், ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளன.

இதனால் நேற்றுமுன்தினம் இப்பகுதியில் போக்குவரத்திற்கு பயணிகள் எவரும் அனுமதிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## க.பொ.த.(உ) பரீட்சைமுடிவு விரைவில் வெளிவரும்

(கொழும்பு)
வடபகுதிக்கான க.பொ.த. (உயர்தரப்) பரீட்சை முடிவுகள் கல்விப்பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம் மூலம் அவ்வப் பகுதிக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இப்பரீட்சை முடிவுகள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாணவர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை என்பதும் தெரிந்ததே. (இ)

## வரிவிளம்பரம்

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைகாலன்யல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து. இரத்தப்போக்கு வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களின் பிரபலமான வர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். (சி-7119)

### சிவாஸ் ஸ்ரூடியோ இடமாற்றம்

பண்டத்தரிப்பில் இயங்கி வந்த சிவாஸ் ஸ்ரூடியோ தற்பொழுது சித்தங்கேணியில் இயங்கிக்கொண்டு இருக்கிறது. சிறந்த முறையில் வீடியோ, கலர் கறுப்பு வெள்ளைப் புகைப்படங்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைப் படங்கள் சிறந்த முறையில் குறைந்த கட்டணத்தில் குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம். "சிவாஸ் ஸ்ரூடியோ, சித்தங்கேணி, வட்டுக்கோட்டை. (சி-7106)

### வியாபாரிகளுக்கு

தரமான இமிரேசன் கோல்ட் கவரிங் நகைகள் மணப்பெண் சோடனை நகைகள், லேஸ் நூல் வகைகள் சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு அழகு சாதனப் பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாகப் பெற்றுக் கொள்ள ஜெயா அழகு சாதன மாளிகை, 177A, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (ஏ-2785)


## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்

# ஆதனவரி பற்றிய அறிவித்தல்

1993-ம் ஆண்டிற்கான ஆதனவரியை உரிய காலத்திற்கு முன்பதாகச் செலுத்தினால் பந்தி ஒன்றில் குறிப்பிட்ட பிரகாரம் விசேட கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு கந்தாயம் (காலாண்டும்), முடிவடைந்த பின் வரி செலுத்தபவர்கள் பந்தி இரண்டின் பிரகாரம் தண்டம் செலுத்த நேரிடும்.

1. விசேட கழிவு
   - (அ) 1993-ம் ஆண்டின் 4 கந்தாயங்களுக்கும் 31-01-1993-ம் திகதிக்கு முன்னர் பணம் செலுத்துபவர்களுக்கு 10% கழிவு வழங்கப்படும்.
   - (ஆ) 1993-ம் ஆண்டின் ஒவ்வொரு கந்தாயத்திற்கும் அக்கந்தாயத்தின் முதல் மாத முடிவிற்கு முன்னர் பணம் செலுத்துபவர்களுக்கு 5% வீத கழிவு வழங்கப்படும்.
2. தண்டம்
   - (அ) குடியிருப்பு ஆதனங்களுக்கு 15% வீத தண்டம் பணமாக அறவிடப்படும்.
   - (ஆ) வியாபார நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் ஆதனங்களுக்கு 20% தண்டப்பணமாக அறவிடப்படும்

எனவே வரியிறுப்பாளர்கள் நிலுவையின்றி உரிய காலங்களில் ஆதனவரியைச் செலுத்தி சபையின் அபிவிருத்திக்கு உதவுமாறு மிக விநயத்துடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ந. ஞானவேல்,<br>செயலாளர்,<br>நகராட்சி மன்றம்,<br>வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,<br>வல்வெட்டித்துறை,<br>06-01-1993.

(ஏ-2781)

## நடைபாதை

(அரியாலை)

போக்குவரத்து நெருக்கடியை நீக்குமுகமாகவும் பொதுமக்கள் வசதியாக செல்லுவதற்கும் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் ஒருபக்கமாக நடைபாதை ஒன்று யாழ் மாநகரசபையினரால் அமைக்கப்பட்டு வருகிறது. (59)

## செயல்திட்டம்

(பண்டத்தரிப்பு)

வலி தென்மேற்கு பிரதேச சபைப் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாஜம் 1993-ம் வருடத்திற்கான செயல்திட்டம் ஒன்றை தயாரித்து வலி தென்மேற்கு பிரதேச சபையின் விசேட ஆணையாளருக்கு நடவடிக்கைக்காக அனுப்பி வைத்துள்ளது (7:)

## இலாபப் பணம் பங்கீடு

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் தைப் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சங்கத்தின் லாபத்தில் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை சங்க உறுப்பினர்களுக்கு வழங்கியுள்ளது. (72)

## மேசைகள் விநியோகம்

(புலோலி)

வடமராட்சிப் பகுதியில் உள்ள எட்டு சுகாதார வைத்திய சிகிச்சை நிலையங்களுக்கு யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களம் ஒரு தொகுதி மேசைகளை வழங்கியுள்ளது. (61)

## வீட்டுத் தோட்டம்

(வட்டுக்கோட்டை)

சமிகாரனை உதவி அரசாங்க அதியர் பிரிவிலுள்ள அகதி முகாம்களில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கும் கிராமயகங்களுக்கும் மலைவேம்பு, நெல்லி, பலா, கமு, வேம்பு போன்ற மரக் கன்றுகளையும் வீட்டுத் தோட்டத்திற்கான வெண்டி, பயற்றை, சிறகவரை, புடோல் போன்ற விதை தானியங்களையும் கத்தரி, மிளகாய், தக்காளி, அகத்தி போன்ற கன்றுகளையும் போரூட் ஸ்தாபனத்தினர் விநியோகித்து வருகின்றனர். (139)

## புகையிலைச் செய்கை கட்டுப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

1992-93 கால போகத்திலே ஜனவரி மாதத்திற்குப்பின் சிறுதானியச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் புகையிலைச் செய்கையை நிறுத்திக்கொள்வதென விவசாயிகளைச் சம்பந்தப்பட்ட விவசாயத்துறை சார்ந்த குழுவினர் வேண்டிக் கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# போராட்டத்தில் பெண் போராளிகளும் சாதனைபடைத்தனர்

(நல்லூர்)

"ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் மட்டுமன்றி இந்திய இராணுவத்தினருடனும் தமிழீழ விடுதலைப் புலிகள் போராடி சாதனைகளை படைத்துள்ளனர். தொடர்ந்தும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் போராடி வருகின்றனர்!"

தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா நடேசன் விடுதலைப்புலிகளின் மகளிர் படையணியின் 'விழித்தெழுவோம்' ஒலிப்பதிவு நாடா வெளியீட்டுவிழாவில் சிறப்புரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

யாழ் இந்துமகளிர் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற வெளியீட்டுவிழாவில் அவர் மேலும் தெரிவிக்கையில்: புரிந்துவரும் சாதனைகளில் ஆண் போராளிகள் மட்டுமன்றி பெண் போராளிகளும் பங்கெடுக்கின்றனர். முன்னைய காலத்தில் கலாச்சாரம் பண்பாடு என்ற மூட நம்பிக்கைகளுக்குள் உட்படுத்தப்பட்டு பெண்கள் வாழ்ந்து வந்தனர். இன்றைய காலகட்டத்தில் இந்த நிலைமை முற்றாக மாறிவருகிறது.

யாழ் மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ஆர்த்தி தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு விழாவை வலிகாமம்கோட்ட தளபதி இளங்குமரன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார் வரவேற்புரையை மகளிர் அமைப்பு வெளியீட்டுப் பிரிவைச்சேர்ந்த செல்வி தமிழவளும் வெளியீட்டுரையை வெளியீட்டுப் பிரிவைச் சேர்ந்த செல்வி மலைமகளும் நிகழ்த்தினர். மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ஜெயா ஒலிப்பதிவு நாடாவை வெளியீட்டு வைத்தார். செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி ஜனனி, கவிஞர் மு வே யோ. வாஞ்சிநாதன் ஆகியோர் சிறப்புரைகளை வழங்கினர்கள். (158)

## சேவைக்கால ஒய்வூதியம்

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கான ஒய்வூதியம் அரசு பொறுப்பேற்குமுன் ஆற்றிய சேவைக்காலமும் கணிக்கப்படவேண்டுமென்று கல்விச் சேவைகள் ஆணைக்குழு செயலாளரினால் சகல மாவட்ட கல்விப் பணிப்பாளர்களுக்கும் சுற்று நிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்குமுன் கடமையாற்றிய 1500 தமிழ் ஆசிரியர்கள் பயனடைவர். 1989ம் ஆண்டு அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்ட இத்தீர்மானத்தை அமுல் படுத்த நடவடிக்கை எடுக்கும்படி இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்தி வந்தது. (54

## நிர்வாகிகள் தெரிவு

(நெல்லியடி)

புலோலி கிழக்கு சந்தா தோட்டம் சனசமூக நிலையமும் வாசிகசாலையும் வருடாந்தப் பொதுக் கூட்டத்தை அண்மையில் திரு. வி. சி. நவரத்தினம் தலைமையில் நடாத்தினர்.

புதுவருட நிர்வாகிகளாக திரு. பீ சிவராசா தலைவராகவும், திரு வி. விவேகானந்தன் உபதலைவராகவும், திரு. கே இ கிருபாகரசூரியன் செயலாளராகவும் திரு. எம். நடராசா பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டதுடன் நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவாகினர். (160)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக் கிளை தலைமையகம்

# பயிற்சிநெறிகள் - 1993

கீழ்வரும் இலவச பகுதிநேர பயிற்சி நெறிகள் யாழ். கிளைத் தலைமையகத்தில் நடாத்தப்படவுள்ளன. பயில விரும்புவோர் குறைந்தது க.பொ.த சாதாரணப் பரீட்சையில் கீழ்வரும் ஒவ்வொரு பயிற்சிநெறியின் அருகிலுள்ள அடைப்புக் குறிகள் குறிப்பிட்டுள்ள பாடங்கள் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

- தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து (தமிழில் திறமைச் சித்தி)
- ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து (ஆங்கிலத்தில் திறமைச் சித்தி)
- பத்திரிகையாளர் பயிற்சி (தமிழ், ஆங்கிலம், கணிதம் — சித்தி)
- சமூக நலனும் சமுதாய சேவையும் (தமிழ், ஆங்கிலம், கணிதம் — சித்தி)
- முதல் — உதவி (சுகாதாரம் — சித்தி)
- ஆரம்ப சுகாதாரம் (சுகாதாரம், /சமூகவியல் சித்தி, உதவித் தாதி பயிற்சி பெற்றோருக்கு முன்னுரிமை)
- உதவித் தாதி (சுகாதாரம் — சித்தி)
- மருந்தாளர் பயிற்சி (Dispensers' Course) (தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் — சித்தி)
- தமிழ்
- ஆங்கிலம்

விண்ணப்பங்களைத் தாம் வதியும் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுத் தலைவரின் சிபார்சுடன் எமக்கு 20-01-93க்கு முன்பாக அனுப்பி வைக்கவும். இதற்காக 23-01-93 முற்பகல் 9-00 மணிக்குத் தலைமையகத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குச் சான்றிதழ்களுடன் சமூகந்தரவும். 30-01-93ல் பயிற்சிநெறிகள் ஆரம்பமாகும்.

### தையல் பயிற்சி:

மேற்படி தையல் பயிற்சி இலவச வகுப்புகள் ஒவ்வொரு பிரிவிலும் ஆரம்பமாகவுள்ளன. இதில் பயில விரும்புவோர் பிரிவுக் காரியாலயத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

செஞ்சிலுவைச் சங்கச் சேவையின்<br>கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,<br>யாழ்ப்பாணம்,<br>08-01-1993.

(ஏ-2780)

# இராசி பலன்

11-01-1993

(தமிழுக்கு மார்கழி 27)

திங்கட்கிழமை

திருதியை ந. ப. 12-58 வரை. மகம் வைகறை. 5-48 வரை. மரணயோகம் இராகுகாலம் காலை 8-03 முதல் 9-33 வரை. சுபநேரம் நண்பகல் 12-33 முதல் 2-03 வரை.

மேஷம்; அசாத்திய துணிவு தொழில் கஷ்டம், மன வெறுப்பு.

இடபம்: உறவினர் விரோதம், சிறு வியாதி, தாழ்ந்த நிலை.

மிதுனம்: குடும்ப சுகம், பிறர் பாராட்டு, எதிர்பாராத உதவி.

கடகம்: சத்துரு உபாதை, மறதி, பணக்கஷ்டம்.

சிங்கம்: பிறந்தக வாசம், மனக்களிப்பு, பணவரவு.

கன்னி: ஜீவன கஷ்டம், கெட்ட சொப்பனம், சுப ஜெயம்.

துலாம்: பொது நிகழ்வில் பங்குபற்றல், தொழிலாபம் இனிய உறவு.

விருச்சிகம்: ஆலய திருப்பணி, பெண் உதவி, காரிய சித்தி.

தனுசு: பழைய சிந்தனை, மனப்போராட்டம், சோம்பல்.

மகரம்: குடும்ப பகை, தொழில் முடக்கம், இடைஞ்சல்.

கும்பம்: சுபகாரியம், பண அனுகூலம், பாராட்டு.

மீனம்: புத்திரலாபம், விருந்துண்ணல், அதிக முதலீடு.

- ஜோஸ்யர்.


# இசைப்பயிற்சி வகுப்புக்கள்

- ★ கிற்றார் (Guitar)
- ★ ஒகன் (Orgon)
- ★ றம் (Drumph)
- ★ தபேலா (Thebela)

பயிற்சிகள் சனி, ஞாயிறு மட்டும் நடைபெறும்

ஆரம்பம்: 16-01-93

விபரங்களுக்கு:

**JAFFNA TECHNICAL INSTITUTE**

(றெயில்வே கடவை அருகாமை)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(எ 2783)

வெளிவந்துவிட்டது தை - பங்குனி

மக்கள் சஞ்சிகை விலை 10/-

([சி-7135])

# ஆத்மீக தேசிய மறுமலர்ச்சியை சுவாமி விவேகானந்தர் ஏற்படுத்தினர்

## — நாளை அவரது 130வது பிறந்ததினம் —

1893-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ம் திகதி சிக்காகோ நகரில் நடைபெற்ற சர்வமத மகாசபையில், அன்பான சகோதர சகோதரிகளே! என ஒரு கம்பீரமான குரல் ஒலித்தது. சபையிலிருந்த அனைவரும் திடுக்கிட்டனர். காரணம் அதுவரை கனவான்களே! சீமாட்டிகளே! என்றே வேட்டுப் பழகிப் போயிருந்தவர்களுக்குச் சகோதர சகோதரிகளே என்ற அழைப்புப் புதுமையாக இருந்தது.

இதற்குக் காரணமாயிருந்தவர் வேறு யாருமல்ல வங்கத் துச் சிங்கம் நரேந்திரர் தான். நரேந்திரர் என்பது சுவாமி விவேகானந்தரின் இயற்பெயர். இன்று அவருடைய 130-வது பிறந்த தினம்.

1893-9-11-ல் தான் உலக இந்து மதத்தைப் பற்றியும், அதன் பெருமைகளையும் தெரிந்துகொண்டது. இவரது சிக்காகோ சொற்பொழிவுகளில் முக்கியமானது "இந்து சமயம்" என்னும் பொருள் பற்றியது. அமெரிக்காவின் பல இடங்களிலும் சுவாமி பிரசங்கம் செய்தார்.

சுவாமிகளின் பிரசங்கங்களைத் தொடர்ந்து அமெரிக்காவில் பல வேதாந்த சபைகள் நிறுவப்பட்டன. வேதாந்தமே சுவாமிகளின் அடிப்படைப் பொருளாக இருந்தது. இதனைத் தொடர்ந்து இப்புதிய பரந்த சமயத்தின் கொள்கைகளை நாமும் கற்க வேண்டுமென இங்கிலாந்திலிருந்தும் அழைப்பு வந்தது.

ஆங்கிலேயர்களின் அழைப்பினை ஏற்று சுவாமி பிரான்ஸ் ஊடாக இங்கிலாந்து போய்ச் சேர்ந்தார். பிரான்சிலும், இங்கிலாந்திலும் பல சொற்பொழிவுகள் நடாத்தினர். 1897-ம் ஆண்டு ஜனவரி 15ம் திகதி சுவாமிகள் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தார். சுவாமியின் திருவடிகள் யாழ்ப்பாணத்திலும் பதிந்தன. கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் பல சொற்பொழிவுகளை சுவாமி நிகழ்த்தினார்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற தாரக மந்திரத்தின் பொருளை உலகிற்கு உணர்த்தியவர் சுவாமி விவேகானந்தரே. அக்காலத்தில் இந்தியாவில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த உடன்கட்டை ஏறல், பாலிய விவாகம் போன்ற ஒடுக்குமுறைகளை உடைத்தெறிந்து சமூகத்தில் புரட்சியை ஏற்படுத்தியவர் விவேகானந்தர். 'எழுந்திரு விழித்திரு. துணிவுடன் செயல்படு' என்பதே சுவாமிகளின் அருள் வாக்கு.

19ம் நூற்றாண்டில் உலகில் தோன்றிய மகான் சுவாமி விவேகானந்தரே. இவரை ஒரு அவதார புருஷர் என்றே அனைவரும் கருதுகின்றனர். அன்றைய அடிமை இந்தியாவைப் பார்த்து சுவாமிகள் மிகவும் கவலை கொண்டார், இந்திய இளைஞர்களை பார்த்து நீங்கள் கோழைகளாகி எத்தனையோ ஆண்டு காலம் அடிமைகளாக உறங்கியது போதும் இனியும் தூக்கம் வேண்டாம் வீரர்களே எழுந்து வீறுடன் செயற்படுங்கள் என்றார். இன்றைய இந்தியாவிற்குத் தேவை வேதங்களோ அவற்றை வேதங்களை ஓதுவதோ அல்ல. வீறுகொண்ட இளைஞர் கூட்டமே இன்றைய இந்தியாவுக்குத் தேவை. இவர்கள் இந்தியாவின் அடிமைத்தளையை உடைத்தெறிவர் எனவும் கூறினார்.

19-ம் நூற்றாண்டு இந்தியாவில் சுவாமி விவேகானந்தர் ஒரு புரட்சியையே ஏற்படுத்தியிருந்தார். அமெரிக்கா உட்பட உலக மக்களிடையே ஆத்மிக தேசிய மறுமலர்ச்சியை சுவாமி விவேகானந்தர் ஏற்படுத்தினர்.

—ந-ப

# நவாலி ஸ்டேஷன் பாடசாலை புதுப்பொலிவு பெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். நவாலி ஸ்டேஷன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை [அ. மி. த. க] தற்போது புதுப்பொலிவுபெற்று திகழ்கிறது.

சுமார் ஏழாயிரம் ரூபா செலவில் வெள்ளையடிக்கப்பட்டு சில திருத்த வேலைகளும் செய்யப்பட்டுள்ள இப்பாடசாலை சுமார் பத்துவருடங்களுக்குப்பின் இவ்வித புதுப்பொலிவு பெற்றுள்ளது.

யாழ். புனர்வாழ்வு செயலக நிதியிலிருந்து இந்த நிதியை இப்பாடசாலை செப்பனிடும் வேலைகளுக்காக ஒதுக்கித்தந்து உதவியமைக்காக பாடசாலை அதிபர் க. கணேசலிங்கம் யாழ். செயலகத்தினருக்கும் இம்முயற்சியில ஈடுபட்ட யாழ். கல்வித் திணைக்களத்திருக்கும் மருதனமடம் கல்விக் கோட்டத்தினருக்கும் நவாலி கொத்தணி அதிபருக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

புதுப்பிக்கப்பட்டுள்ள இப்பாடசாலை மண்டபத்தில் பொங்கல் தினத்தை முன்னிட்டு கதம்ப விழாவொன்றும் விரிவான முறையில் நடத்தப்படவுள்ளது.

## மயங்கியவர் மரணமானார்

(நெல்லியடி)

மயங்கிய நிலையில் கடற்கரையில் கிடந்தவர் மந்திகை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றசமயம் அங்கு மரணமானார்.

இச்சம்பவம் வியாபாரிமூலை 1-ம் கட்டையில் இடம்பெற்றுள்ளது. இறந்தவர் மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து அப்பகுதியில் வசித்து வந்தவரான நடராசு கதிரபலைநாதன் (வயது 52) என்ற ஆறு பிள்ளைகளின் தந்தையாவார். (160)

## வருடாந்த கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை வடக்கு கற்பகச்சோலை கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்தக் கூட்டத்தில் தெரிவான புதிய நிர்வாகிகள் வருமாறு:

தலைவர்: திரு. கி. வைரமுத்து. உபதலைவர்: திரு. மு. இந்திரசேனன், செயலாளர்: திரு இ. கு. சிவஞானம், உப செயலாளர்: வைத்திய கலாநிதி கி. வரதராசன், பொருளாளர்: திரு. சண்முகலிங்கம்.

7 பேர் கொண்ட புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

# இந்து-முஸ்லிம் கலவரங்களில் குஜராத்-பம்பாயில் 108 பேர் பலி

(புதுடில்லி)

குஜராத் மாநிலத்தில் அகமதாபாத் நகரில் இடம்பெற்ற மதக் கலவரத்தில் நேற்று முன்தினம் இரவு 28 பேர் கொல்லப்பட்டனர் 68 பேர் படுகாயமடைந்தனர்.

பாபர் மசூதி பிரசனையை தொடர்ந்து இக் கலவரம் மீண்டும்வெடித்தது. தொழிற்சாலை ஒன்றை காவலையடிக்கச் சென்ற ஆறுபேர் அத் தொழிற்சாலை தீப்பற்றிக்கொண்டதில் உயிருடன் கருகிப் போனதாக தெரிவிக்கப்படுகிறது.

வன்முறைக் கும்பல்களை கலைப்பதற்காக பொலிஸார் 480 கண்ணீர் புகைக் குண்டுகளை வெடிக்க வைத்துள்ளனர். 60 க்கும் மேல் சுட்டுள்ளனராம். பதற்றம் நிலவும் இடங்களுக்கு இராணுவம் வரவழைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் பம்பாயிலும் அதன் புறநகர்ப்பகுதியிலும் இடம்பெற்றுவரும் கலவரங்களை அடக்க இராணுவத்தினருக்கு கண்டவுடன் சுடும் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

பம்பாயின் பல பகுதிகளிலும் பெருமளவு இராணுவம் குவிக்கப்பட்டு ரோந்து பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாம். பம்பாயில் இந்து-முஸ்லிம் கலவரங்களில் 80க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கிடையில் மஹாராஷ்டிரா அரசைகலைக்குமாறு சில கட்சிகள் மத்திய அரசை கோரியுள்ளனர். (சி)

# பம்பாய் நகரை ராணுவத்திடம் ஒப்படைக்கவும்

(பம்பாய்)

பம்பாய் நகரத்தை இராணுவத்திடம் ஒப்படைக்குமாறு அகில இந்திய முஸ்லிம் மஜ்லிசட்ட அமைப்பு பிரதமர் நரசிம்மராவை கோரியுள்ளது.

பிரதமர் நரசிம்மராவை சந்தித்த இதன் பிரதிநிதிகள் மஹாராஷ்டிரா முதல்வரை பதவி நீக்குமாறும் கோரியுள்ளனர்.

மேலும் அயோத்தி குறித்து மத்திய அரசின் திட்டத்தை எதிர்க்குமாறும் இவர்கள் நாடாளுமன்ற முஸ்லிம் எம். பிக்களை கேட்டுள்ளனர். அயோத்தியில் சர்ச்சைக்குரிய பகுதியை மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தையும் இந்த அமைப்பு கண்டனம் செய்துள்ளது. (சி)

# முடப்பட்டுள்ள ஆலயங்கள் திறக்க பிரார்த்திப்போம்

(கொழும்புத்துறை)

நம் ஈழத்தமிழ் நாட்டில் பூட்டியுள்ளதும், இடிபாடுடையதுமான சிவத்தலங்கள் மீளத் திறந்து மனிதநேயம் சிறக்கப் பிரார்த்திப்போம்.

திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முனீஸ்வரம் கதிர்காமம், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம். ஈழத்துச் சிதம்பரம், நயினாதீவு ஸ்ரீ நாகபூசனி அம்மன் கோவில் திருத்தலங்கள் மீளப்பெறவும், சமய மரபுகள் பேணுவதற்கும் சிறப்புநிலையில் சிந்திப்போமாக என திருவாதிரைக் கால சிறப்புச் சிந்தனைக்கு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் சுற்று நிருப மூலம் தெரிவித்துள்ளனர்.

இந்து சமய வழிபாட்டில் ஆறுகாலப் பூசைகள் மீள நடைபெற நல்லூர் அரச சபையின் ஆன்மீக அலைகளை வலுப்படுத்த ஆகம விதி முறையிலான நேரக்கணிப்பை பின்பற்றுமாறும் வெள்ளிக்கிழமை சிறப்பு நிலையில் நற்சிந்தனைகளும் சமய - சமூக, பொருளாதாரவளம் பெருகவும் சிந்திப்போமாக எனப் பேரவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (154)

## 'எயிட்ஸ்' கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் லயன்ஸ் கழகம் நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் செங்குந்தா இந்துக்கல்லூரி மண்டபத்தில் 'எயிட்ஸ் நோயின் பாதிப்பும் பாதுகாப்பும்' பற்றிய கலந்துரையாடலை ஒழுங்குசெய்துள்ளது. யாழ். வைத்திய சுகாதார அதிகாரி ஆர். தெய்வேந்திரன் இந்நிகழ்வை நடாத்த உள்ளார். படக்காட்சியும் காண்பிக்கப்படும். சகல பாடசாலைகளினதும் உயர்வகுப்பு மாணவ மாணவிகள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றலாம்,

## உணவுப்பொருள் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குரிய பத்து லட்சம் ரூபா பெறுமதியான உணவுப்பொருட்கள் எடுத்துவரமுடியாத நிலையில் உள்ளன.

தற்போது கிளாலி போக்குவரத்து சேவை சீரின்மையால் இவற்றை கொண்டுவருவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இவை எடுத்துவரப்படும் பட்சத்தில் தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கமூலம் விநியோகிக்கப்படும். (159)

## இலவச திருமண பதிவு

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் தெற்குப் பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் அண்மையில் 26 தம்பதிகளுக்கு சங்க காரியலத்தில் வைத்து இலவச திருமணப் பதிவை நடாத்தி வைத்துள்ளது. (72)

## யன்னல் கதவு திருட்டு

(அரியாலை)

யாழ். ஆஸ்பத்திரி வீதி வேம்படி சந்தியில் உள்ள இடிபாட்டுக்கட்டிடத்தின் மேல் மாடியில்உள்ள யன்னல் கதவுகள் தீராந்திகள் மரங்கள் ஆகியன இரவு நேரத்தில் திருடப்பட்டுள்ளன. (59)

# மகாராஷ்டிர ஆளுநராக அலெக்ஸாண்டர் நியமனம்

(சென்னை)

தமிழக முன்னாள் ஆளுநர் டாக்டர் பி சி அலெக்ஸாண்டர் மகாராஷ்டிர மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மகாராஷ்டிர ஆளுநர் சி. சுப்பிரமணியம் தமது ஆளுநர் பதவியை ராஜினாமாச் செய்ததையடுத்தே மேற்படி நியமனம் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

திரு. பி. சி. அலெக்ஸாண்டர் காலம் சென்ற முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் முதன்மை செயலாளராகவும், பிரிட்டனுக்கான இந்தியத் தூதராகவும் கடமையாற்றினார். (க)

## குமாரி கப்பலில் தபால் பொதிகள்

(நல்லூர்)

கொழும்பிலிருந்து புறப்படவிருக்கும் "குமாரி" கப்பலில் தபால் பொதிகளும் எடுத்துவரப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. பெருமளவுதபால் பொதிகள்கொழும்பில் தேங்கிக் கிடப்பதாகவும் அவற்றை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க கொழும்பு சென்றுள்ள தபால் அத்தியட்சகர் எஸ். எம். சேதுகாவலர் முயற்சி செய்துவருகிறார் எனவும் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (158)

## தையல் பயிற்சி நெறி

(நெல்லியடி)

யாழ்ப்பாணம் தொழில் இலாகாவினரால் கரவெட்டி நாமகள் சனசமூகநிலைய ஆதரவில் தையல் பயிற்சி நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிலையத்தலைவர் திரு. கே. வேலாயுதபிள்ளை தலைமை வகித்த இத்திறப்பு விழாவில் யாழ் கூட்டுறவு தொழில் இலாகா ஆணையாளர் திரு. சிவப்பிரகாசம் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். (161)

# இந்திய மீனவர்கள் மீண்டும் கடத்தலில் ஈடுபாடு

(கொழும்பு)

கடத்தலில் இந்திய மீனவர்கள் மீண்டும் ஈடுபட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பல மாதங்களுக்குப் பின்னர் இராமேஸ்வரத்துக்கு அருகிலுள்ள மீனவர்கள் கடத்தல் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

பொலிஸார், சுங்கப்பகுதியினரின் ஆதரவுடனேயே இந்தக்கடத்தல் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகதெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் ஒரு லீற்றர் பெற்றோலை 20 ரூபாவுக்கு வாங்கி மன்னாரிலும், யாழ்ப்பாணத்திலும் அதனை 600 ரூபாவுக்கு விற்கிறார்கள் 8 ரூபாவுக்கு வாங்கும் டீசலை 450 ரூபாவுக்கு விற்கிறார்கள். [இ]

## இன்று

(யாழ்ப்பாணம்)

யா/ஞானசாரியார் கல்லூரியில் கற்பிக்கும் சித்திர ஆசிரியர் திரு எஸ். இராமச்சந்திரனால் ஆக்கப்பெற்ற சித்திரக் கைநூல் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை மேற்படி பாடசாலையில் காலை 9-00 மணியளவில் சித்திரக் கலைவல்லுனர் திரு. ரமணியின் தலைமையில் நடைபெறவுள்ளது.

# ★ ஆனையிறவும் பாதை திறக்கப்பட்டால் யாழ்ப்பாணக் குடாவுக்குள் இராணுவம் பிரவேசிக்கலாம்

(கொழும்பு)

பொதுமக்கள் பாவனைக்கு புலிகள் ஆனையிறவுப் பாதையைத் திறந்துவிட்டால் படையினர் யுத்த டாங்கிகள், குண்டு வீச்சு விமானங்கள் சகிதம் யாழ். குடாவுக்கு பிரவேசிக்கலாம் என்பதில் உண்மை இல்லாமலில்லை என வெளிநாட்டு பத்திரிகையாளர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்

இதேவேளை ஏற்கனவே விடுதலைப் புலிகளால் திறந்து விடப்பட்ட காங்கேசன்துறை சேந்தாங்குளம் பாதையூடாக இராணுவம் யாழ். குடாவை நோக்கி வெளியேறியது குறிப்பிடத்தக்கது.

## மாகாண சபைத் தேர்தலில் எதிரணிகளுடன் இணைந்து சுதந்திரக்கட்சி போட்டியிடும்

(கொழும்பு)

அடுத்த ஜூன் மாதம் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் சுதந்திரக்கட்சி எதிரணிகளுடன் இணைந்து போட்டியிடவுள்ளது.

இத்தேர்தலில் சுதந்திரக் கட்சி எதிரணிக்கட்சிகளுடன் இணைந்து பொதுவேட்பாளர் பட்டியலில் போட்டியிடுவது குறித்து ஏனைய எதிர்க்கட்சிகளுடன் பேச்சுக்கள் நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாகாணசபைத் தேர்தலை சுதந்திரக்கட்சி பகிஷ்கரித்திருந்ததும் தெரிந்ததே. (சி)

## தைப்பொங்கல் தினத்தில் தீவுப்பகுதிக்கு மின்சாரம்

(கொழும்பு)

தீவுப்பகுதிகளுக்கு எதிர் வரும் பொங்கல் தினம் முதல் மின்சாரம் கிடைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தீவுப்பகுதி. மற்றும் மாதகல் பகுதியின் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கை, சிவில் நிர்வாக பணிகளை துரிதப்படுத்தும் நோக்கில் புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூகநலத்துறை அமைச்சின் செயலர் திரு. கிறிஸ்ரி சில்வா தலைமையிலான குழு இம்மாதம் 13ம் திகதி இப்பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தற்பொழுது நடைபெற்றுவருகிறதாம். (சி)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகலிங்கம் தமனியரூபி

அத்தியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகலிங்கம் தமனியரூபி 5-1-93 அன்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார். அன்னார் திரு. சி. கனகலிங்கத்தின் (ஒய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், கனகரூபி (கனடா), ரூபலிங்கம் (கனடா), சாந்தலிங்கம் (கொழும்பு) சிவனேசலிங்கம் (சுவிஸ்), சிறிகாந்தலிங்கம் (சுவிஸ்), ஆனந்தரூபி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரன் (கனடா), கோமதி (கனடா), லோகினி (கொழும்பு), கண்ணதாசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிஷாகரன், லக்ஷ்மி, வித்யா, விதுஸ்கரன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், காலஞ்சென்ற திரு. சண்முகநாதனின் அன்புச் சகோதரியும், ருக்மணி, இராசலிங்கம ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் ஈமைக் கிரியைகள் 7-1-93 வியாழக்கிழமை, வெள்ளவத்தை விவேகானந்தா வீதியில் நடைபெற்று, கல்கிசை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
திருமதி தங்கராசா (மருமகள்)
கொய்யாத்தோட்டம்.

(சி 7134)

### திரு. செல்லையா கதிரவேல்

குப்பிளானைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் திரு. செல்லையா கதிரவேல் அவர்கள் 10-01-93 ஞாயிறு சிவபதம் அடைந்தார். அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், திரு. செ. அப்புத்துரையின் அன்புச் சகோதரரும், திருமதி சு. குலமணிதேவி, காலஞ்சென்ற சண்முகானந்தன், நித்தியானந்தன் (கிராம சேவையாளர்), திருமதி சி. சோதிமணி, காலஞ்சென்ற சுத்தானந்தன், சிவானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. ஆ. சுப்பிரமணியம் (பரீட்சைத் திணைக்களம், கொழும்பு), திருமதி நி. அன்னலட்சுமி (கிளி), திரு. செ. சிவதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுபத்திரா, சந்திரிகா, சுதர்சன், சர்மினி, தயாளினி, லோகானந்தன், ஜெயந்தா, லோஜீ, ரஜனி, மதன், சக்தி ஆகியோரின் அன்புப் பேரனுமாவரர். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 11-01-93 திங்கட்கிழமை (இன்று) குப்பிளானில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2-00 மணியளவில் குப்பிளான் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;
க. நித்தியானந்தன் (மகன்)
கிராம சேவையாளர்,
யாழ். நகர், J/73.

(சி 7133)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் இலன்கோவில் மேற்கு வீதி,63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஜனவரி மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office: Sri Lanka under Licence Nnmber B/10336/B

## வீரச் சாவு

(மணலாறு)

கொக்குத்தொடுவாயில் விடுதலைபபுலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிப்போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

வீரவேங்கை கப்டன் முத்துச் செல்வன் அல்லது ஆனந்தகுமார் எனப்படும் குஞ்சன் மதியழகன் மன்னார் பூநகரி ஆலயங்கேணி, வீரவேங்கை லெப். இளமாறன் அல்லது சூரியகுமார் எனப்படும் (தேவராசா சதீஸ் குமார் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி) ஆகியோரே வீரச்சாவடைந்தவர்களாவார். (க)

## தமிழருக்கு நீதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் நகருக்கு வரும்போது எனது மனைவியுடன் கொழும்பிலிருந்து நேராக வாகனத்திலேயே வருவேன். நான் தற்போது கொழும்பு சென்றதும் முதல் வேலையாக, போக்குவரத்தில் தமிழ்மக்கள் படும் வேதனையை தீர்த்து வைப்பதிலேயே எனது முழுக் கவனத்தையும் செலுத்துவேன்.

கடந்த நத்தார் - புதுவருட நிகழ்ச்சிகளை கொழும்பிலுள்ள கிறிஸ்தவ மக்கள், பல லட்சம் ரூபா செலவு செய்து ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் மிக ஆடம்பரமாகக் கொண்டாடினார்கள். இந்நிகழ்ச்சிகளில் நான் கலந்துகொண்டபோது வடபகுதியில் தமிழ் மக்கள் உணவின்றியும், கடும் இருட்டிலும் நத்தார், புது வருடத்தைக் கொண்டாடினார்கள். இந்த நிலை விரைவில் மாறும் என்றும் அவர் கூறினார்.

பரி. யோவான் தேவாலயப் பங்குத் தந்தை வண. நேசகுமார் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் டாக்டர் ஜெயகுலராசா உட்பட பல தேவாலய உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (வி-ரி)

## கூட்டுப் படைத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கூட்டுப்படை தலைமை அலுவலகம் இவ்வாறு அநுராதபுரத்திற்கு மாற்றப்படுவதன் மூலம் விடுதலைப்புலிகளுக்கு எதிரானயுத்தத்தில் ஈடுபடும் இராணுவத்தினருக்கான கட்டளைகளை உடனுக்குடன் வழங்க முடியுமெனவும் இராணுவ உயர்பீடம் கருதுவதாகவும் கூறப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமுகமாக கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா விரைவில் அநுராதபுரத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

தரைப்படை, கடற்படை, வான்படை, பொலிஸ் படை, பாரா இராணுவப்பிரிவு ஆகிய அனைத்தும் கூட்டுப்படை தலைமை அலுவலகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் செயற்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1991ம் ஆண்டு ஜூன் 21ம் திகதி கூட்டுப்படை தலைமை அலுவலகம் விடுதலைப் புலிகளின் குண்டு வெடிப்பினால் தகர்க்கப்பட்டது தெரிந்ததே.

## தொழில் பதிவுச்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் நாட்களில் காலை 9-00 மணி தொடக்கம் மாலை 4-00 மணிக்குமிடையில் யாழ்ப்பாணம், கந்தர்மடத்தில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் வருவாய்ப்பகுதிச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சான்றிதழ்கள் உரிமையாளர்களிடம மட்டுமே கையளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு 12 - 01 - 93 முதல் 13-01-93 வரை, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு 15 - 01 - 93, சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு 16 - 01 - 93. (வீ)

## ஊர்வல

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னைத் தொடர்ந்து பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள். அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள், ச. ச. நிலையங்கள் பொதுநிறுவனங்கள், வர்த்தக சங்கங்கள், மகளிர் அமைப்புகள், மதகுருமார்கள், மகஜரைக் கையளிப்போர் நகர்ந்து செல்வார்கள்.

இந்த ஊர்வலத்தினரைத் தொடர்ந்து மிதிவண்டிகள்,

## தலைவர் பிரபா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளாதாரத் தடைகள் பற்றி அங்கிலிக்கன் ஆயருக்கு விடுதலைப்புலிகளால் விளக்கப்பட்டது.

அங்கிலிக்கன் ஆயருடன் வண டாக்டர் றெஜி பெரேரா வண நேச குமார், டாக்டர் ஜெயகுலராசா ஆகியோரும் தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த வண ஜெபநேசன் அடிகளார், வண. ஜெயநேசன் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த வண. இமானுவேல், யாழ், மாவட்ட ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம்

## சர்வதேச சமூகம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''கடந்த 45 வருடங்களாக ஆட்சிபுரிந்தசிறிலங்கா பேரினவாத அரசுகள் திட்டமிட்டு தமிழ்மக்களுக்கெதிராக பாரிய வன்முறைகளை பிரயோகித்து தமிழர் பிரதேசங்களை அபகரித்து சிங்கள குடியேற்றங்களை அத்துமீறிகுடியேற்றியுள்ளது. எமக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதிகேட்டுபோராடியதற்காக எமது மூலவளங்களை அழித்தனர். பலலாயிரக்கணக்கான மக்களின் உயிர்களை பலியெடுத்தனர். கோடிக்

## யாழ். நகரில் இன்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ லங்கா அரசின் பல்வேறு விதமான ஒடுக்கு முறைகளுக்கு நொந்து போயிருக்கும் யாழ். குடா மக்கள் அனைவரும் இந்த உணர்ச்சி பூர்வமான ஆர்ப்பாட்டத்தை முன் எடுத்துச் சென்று யாழ். செயலகம் முன்பு மறியல் போராட்டத்திலும் குதிக்க இருக்கின்றார்கள்.

பொது நிறுவனங்கள். தொழிற்சங்கங்கள் போன்ற பல்வேறு அமைப்புக்கள் ஒருங்கே சேர்ந்த, வெகுஜன அமைப்பு இந்தச் ஸ்ரீ லங்கா அரசின் அடக்கு முறையை வெளியே வெளிக்கொணரும் நேர்க்கோடு, இந்த ஆர்ப்பாட்ட பேரணியை ஒழுங்கு செய்திருக்கின்றது

வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம் போன்ற யாழ்.குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து பொதுமக்கள் பங்கு பற்றுவதற்கு வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

உணவு, கல்வி, சுகாதாரம், மருத்துவம் போன்ற அடிப்படைத்தேவைகள், கண்மூடித்

## பி. ஜே. பி. தலைவர்கள் விடுதலை

(புதுடில்லி)

பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர்களான எல். கே. அத்வானி, முரளி மனோகர் ஜோஷி மற்றும் விஸ்வ இந்து உறுப்பினர்கள் சிலரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

அயோத்தி பாபர் மசூதி இடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இவர்கள் கடந்த மாதம் கைதுசெய்யப்பட்டது தெரிந்ததே. [க]

மற்றும் வாகனங்களும் செல்ல பேரணி கோயில் வீதி வழியாக சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தை அடைந்து இச்சங்கம் ஊடாக ஐ. நா. சபைக்கு அனுப்புவதற்கு மகஜர் கையளிக்கப்படும். பின் யாழ் அரசசெயலகத்தை அடையும். ஊர்வலத்தினர் யாழ் அரச அதிபர் ஊடாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு மகஜர் ஒன்றை கையளிப்பர் என்று வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது (ரி)

ஆகியோரும், விடுதலைப் புலிகள் தரப்பில தலைவர் பிரபாகரன், அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கடற்புலிகள் விசேட தளபதி சூசை, யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி தமிழ்ச் செல்வன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின் பின்னர் தமிழ் மக்களின் அவலங்களை நேரடியாக அவதானித்தாகவும் இதனை நிவர்த்தி செய்வதற்கு கொழும்பு சென்று தன்னாலியன்ற முயற்சி செய்வதாகவும் அங்கிலிக்கன் ஆயர் தெரிவித்தார். (ரி-சு-க)

கனக்கான சொத்துக்களை அழித்தனர். எமக்கு வழங்கப்படவேண்டிய நியாயமான உரிமைகளை தரமறுக்கின்றனர். பேரினவாத அரசின் போர்வெறிதொடர்கிறது. பட்டினி போட்டு தமிழ் மக்களை சாகடிக்க முனைகிறது தமிழீழ மக்களும் தக்கபதிலடி கொடுக்க தயாராகிவிட்டனர்.

தமிழீழமக்களின் குரலை நெரிக்கும் கொடூர சிறிலங்கா அரசின் கொடுமைகளை தட்டிக்கேட்க காலம் களம் அமைத்துக் கொடுத்திருக்கிறது. எமது இருப்பை வாழ்நிலையை நாமே தீர்மானிக்கும் வரலாற்றுக்கட்டத்தை அண்மித்துவிட்டோம் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

தனமான தாக்குதல்கள் கண்டித்து நடக்கும் இப்பேரணியினர். பின்வரும் நான்கு அம்ச கோரிக்கைகளை சமர்ப்பிக்கவுள்ளனர்

★ 32 மாதகாலம் நடைபெறும் அர்த்தமற்ற போரை முடிவுக்கு கொண்டுவரவேண்டும்.

★ பூநகரி இராணுவத்தை வாபஸ்பெற்று பூநகரிப் பாதையை மக்கள் பாவனைக்கு திறக்கவேண்டும்.

★ யாழ். மாவட்டத்துக்கு விதிக்கப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருட்களின் தடையை நீக்கி, பொருள்கள் தடையின்றி கிடைக்கச் செய்யவேண்டும்.

★ விடுதலைப் புலிகளுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தையை நடாத்தவேண்டும்

இந்த அம்சங்கள் பொருந்திய மகஜர் கோயில் வீதியூடாகச் சென்று ஊர்வலத்தினர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடம் கையளித்த பின்பு, செயலகத்தில் செயலக அதிகாரிகளிடம் கையளிக்கவுள்ளார்கள்.

ஊர்வலத்துக்கான மக்களுக்கு தாக சாந்தியும் செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (சு. ரி. 56)

# மரண அறிவித்தல்

## திருமதி கனகலிங்கம் தமனியரூபி

அத்தியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகலிங்கம் தமனியரூபி 5-1-93 அன்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார். அன்னார் திரு. சி. கனகலிங்கத்தின் (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், கனகரூபி (கனடா), ரூபலிங்கம் (கனடா), சாந்தலிங்கம் (கொழும்பு) சிவனேசலிங்கம் (சுவிஸ்), சிறிகாந்தலிங்கம் (சுவிஸ்), ஆனந்தரூபி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரன் (கனடா), கோமதி (கனடா), லோகினி (கொழும்பு), கண்ணதாசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிஷாகரன், லக்ஷ்மி, வித்யா, விதுஸ்கரன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், காலஞ்சென்ற திரு. சண்முகநாதனின் அன்புச் சகோதரியும், ருக்மணி, இராசலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் ஈமைக் கிரிகைகள் 7-1-93 வியாழக்கிழமை, வெள்ளவத்தை விவேகானந்தா வீதியில் நடைபெற்று, கல்கிசை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:

திருமதி தங்கராசா (மருமகள்)
கொய்யாத்தோட்டம்.

(சி 7134)

## திரு. செல்லையா கதிரவேல்

குப்பிளானைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் திரு. செல்லையா கதிரவேல் அவர்கள் 10-01-93 ஞாயிறு சிவபதம் அடைந்தார். அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், திரு. செ. அப்புத்துரையின் அன்புச் சகோதரரும், திருமதி சு. குலமணிதேவி, காலஞ்சென்ற சண்முகானந்தன், நித்தியானந்தன் (கிராம சேவையாளர்), திருமதி சி. சோதிமணி, காலஞ்சென்ற சுத்தானந்தன், சிவானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. ஆ. சுப்பிரமணியம் (பரீட்சைத் திணைக்களம், கொழும்பு), திருமதி நி. அன்னலட்சுமி (கிளி), திரு. செ. சிவதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுபத்திரா, சந்திரிகா, சுதர்சன், சர்மினி, தயாளினி, லோகானந்தன், ஜெயந்தா, லோஜீ, ரஜனி, மதன், சக்தி ஆகியோரின் அன்புப் பேரனுமாவரர். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 11-01-93 திங்கட்கிழமை (இன்று) குப்பிளானில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2-00 மணியளவில் குப்பிளான் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;

க. நித்தியானந்தன் (மகன்)
கிராம சேவையாளர்,
யாழ். நகர், J/73.

(கி 7133)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி... வன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஜனவரி மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office; Sri Lanka under Licence Nnmber B/10336/B

யாழ் நகருக்கு வரும்போது எனது மனைவியுடன் கொழும்பிலிருந்து நேராக வாகனத்திலேயே வருவேன். நான் தற்போது கொழும்பு சென்றதும் முதல் வேலையாக, போக்குவரத்தில் தமிழ்மக்கள் படும் வேதனையை தீர்த்து வைப்பதிலேயே எனது முழுக் கவனத்தையும் செலுத்துவேன்.

கடந்த நத்தார் - புதுவருட நிகழ்ச்சிகளை கொழும்பிலுள்ள கிறிஸ்தவ மக்கள், பல லட்சம் ரூபா செலவு செய்து ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் மிக ஆடம்பரமாகக் கொண்டாடினார்கள். இந்நிகழ்ச்சிகளில் நான் கலந்துகொண்டபோது வட பகுதியில் தமிழ் மக்கள் உணவின்றியும், கடும் இருட்டிலும் நத்தார், புது வருடத்தைக் கொண்டாடினார்கள். இந்த நிலை விரைவில் மாறும் என்றும் அவர் கூறினார்.

பரி. யோவான் தேவாலயப் பங்குத் தந்தை வண. நேசகுமார் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் டாக்டர் ஜெயகுலராசா உட்படப் பல தேவாலய உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (வி-ரி)

வண டாக்டர் றெஜி பெரேரா வண நேச குமார், டாக்டர் ஜெயகுலராசா ஆகியோரும் தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த வண ஜெபநேசன் அடிகளார், வண. ஜெயநேசன் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த வண. இமானுவேல், யாழ். மாவட்ட ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின் பின்னர் தமிழ் மக்களின் அவலங்களை நேரடியாக அவதானித்ததாகவும் இதனை நிவர்த்தி செய்வதற்கு கொழும்பு சென்று தன்னாலியன்ற முயற்சி செய்வதாகவும் அங்கிலிக்கன் ஆயர் தெரிவித்தார். (ரி-சு-க)

### கூட்டுப் படைத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கூட்டுப்படை தலைமை அலுவலகம் இவ்வாறு அநுராதபுரத்திற்கு மாற்றப்படுவதன் மூலம் விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபடும் இராணுவத்தினருக்கான கட்டளைகளை உடனுக்குடன் வழங்க முடியுமெனவும் இராணுவ உயர்பீடம் கருதுவதாகவும் கூறப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமுகமாக கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா விரைவில் அநுராதபுரத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

தரைப்படை, கடற்படை, வான்படை, பொலிஸ் படை, பாரா இராணுவப்பிரிவு ஆகிய அனைத்தும் கூட்டுப்படை தலைமை அலுவலகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் செயற்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1991ம் ஆண்டு ஜுன் 21ம் திகதி கூட்டுப்படை தலைமை அலுவலகம். விடுதலைப் புலிகளின் குண்டு வெடிப்பினுல் தகர்க்கப்பட்டது தெரிந்ததே. (கூ. சு. ரி.)

### சர்வதேச சமூகம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"கடந்த 45 வருடங்களாக ஆட்சிபுரிந்தசிறிலங்கா பேரினவாத அரசுகள் திட்டமிட்டு தமிழ்மக்களுக்கெதிராக பாரிய வன்முறைகளை பிரயோகித்து தமிழர் பிரதேசங்களை அபகரித்து சிங்கள குடியேற்றங்களை அத்துமீறிகுடியேற்றியுள்ளது. எமக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதிகேட்டுபோராடியதற்காக எமது மூலவளங்களை அழித்தனர். பலலாயிரக்கணக்கான மக்களின் உயிர்களை பலியெடுத்தனர். கோடிக்கனக்கான சொத்துக்களை அழித்தனர். எமக்கு வழங்கப்படவேண்டிய நியாயமான உரிமைகளை தரமறுக்கின்றனர். பேரினவாத அரசின் போர்வெறிதொடர்கிறது. பட்டினி போட்டு தமிழ் மக்களை சாகடிக்க முனைகிறது தமிழீழ மக்களும் தக்கபதிலடி கொடுக்க தயாராகிவிட்டனர்.

தமிழீழமக்களின் குரல்வளையை நெரிக்கும் கொடூர சிறிலங்கா அரசின் கொடுமைகளை தட்டிக்கேட்க காலம் களம் அமைத்துக் கொடுத்திருக்கிறது. எமது இருப்பை வாழ்நிலையை நாமே தீர்மானிக்கும் வரலாற்றுக்கட்டத்தை அண்மித்துவிட்டோம் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

### யாழ். நகரில் இன்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ லங்கா அரசின் பல்வேறு விதமான ஒடுக்கு முறைகளுக்கு நொந்து போயிருக்கும் யாழ். குடா மக்கள் அனைவரும் இந்த உணர்ச்சி பூர்வமான ஆர்ப்பாட்டத்தை முன் எடுத்துச் சென்று யாழ். செயலகம் முன்பு மறியல் போராட்டத்திலும் குதிக்க இருக்கின்றார்கள்.

பொது நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் போன்ற பல்வேறு அமைப்புக்கள் ஒருங்கே சேர்ந்த, வெகுஜன அமைப்பு இந்தச் ஸ்ரீ லங்கா அரசின் அடக்கு முறையை வெளியே வெளிக்கொணரும் நேர்க்கோடு. இந்த ஆர்ப்பாட்ட பேரணியை ஒழுங்கு செய்திருக்கின்றது

வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம் போன்ற யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து பொதுமக்கள் பங்குபற்றுவதற்கு வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

உணவு, கல்வி, சுகாதாரம், மருத்துவம் போன்ற அடிப்படைத்தேவைகள், கண்மூடித்தனமான தாக்குதல்கள் கண்டித்து நடக்கும் இப்பேரணியினர். பின்வரும் நான்கு அம்சக் கோரிக்கைகளை சமர்ப்பிக்கவுள்ளனர்

★ 32 மாதகாலம் நடைபெறும் அர்த்தமற்ற போரை முடிவுக்கு கொண்டுவர வேண்டும்.

★ பூநகரி இராணுவத்தை வாபஸ்பெற்று பூநகரிப் பாதையை மக்கள் பாவனைக்கு திறக்கவேண்டும்.

★ யாழ். மாவட்டத்துக்கு விதிக்கப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருட்களின் தடையை நீக்கி, பொருள்கள் தடையின்றி கிடைக்கச் செய்யவேண்டும்.

★ விடுதலைப் புலிகளுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தையை நடாத்தவேண்டும்

இந்த அம்சங்கள் பொருந்திய மகஜர் கோயில் வீதியூடாகச் சென்று ஊர்வலத்தினர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடம் கையளித்த பின்பு, செயலகத்தில் செயலக அதிகாரிகளிடம் கையளிக்கவுள்ளார்கள்.

ஊர்வலத்துக்கான மக்களுக்கு தாக சாந்தியும் செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (சு. ரி. 56)